DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
அமர்வு வழக்கு எண். 205/2018

அ.சா.– 2

| | |
|---|---|
| பெயர் : திரு. கோவிந்தராஜ் | கிராமம் : |
| த/பெ. : | தொழில்: |
| வயது : | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 12th day of October, 2022.

**முதல்விசாரணை**:–

நான் பூசாரிப்பட்டி வைரன்காட்டில் குடியிருக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன திருப்பதி என் அண்ணன். ஆஜர் எதிரி என் சித்தப்பா மகன். எனது அண்ணன் திருப்பதி வசந்தா என்பவரை காதலித்து திருமணம் செய்திருந்தார். என் அண்ணனுக்கு 3 குழந்தைகள். எனது அண்ணி வசந்தாவிற்கும், ஆஜர் எதிரிக்கும் கள்ளக்காதல் இருந்ததாக ஊரில் பேசிக்கொண்டார்கள். ஆஜர் எதிரியுடன் என் அண்ணிக்கு கள்ளக்காதல் இருந்ததால் என் அண்ணனுக்கும் அண்ணிக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு, என் அண்ணி கோவித்துக்கொண்டு அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார். கடந்த 02.04.2017 ம் தேதியன்று இருவரையும் சமாதானப்படுத்தி அழைத்துவந்தோம். 04.04.2017 ம் தேதியன்று மாலை 6.45 மணியளவில் எனது அண்ணன் கடைக்குச் சென்று, பீடி வாங்கிவிட்டு மாமனார் சின்னப்பையனை அழைத்து வருவதாக என் அம்மாவிடம் சொல்லிவிட்டு கடைக்குச் சென்றார். என் அண்ணனுக்கும் அவர் மாமனார் சின்னபையனுக்கும் ஏற்கனவே தகராறு இருப்பதால் மீண்டும் தகராறு

ஏற்பட்டுவிடுமோ என்று, நானும் என் மைத்துனர் கௌதமமும் என் அண்ணன் பின்னாலேயே சென்றோம். 30 அடி தூரத்தில் நாங்கள் இருவரும் சென்றுகொண்டிருந்தபொழுது, ஆஜர் எதிரி வீச்சரிவாளால் என் அண்ணனின் தலை, வலதுபக்க தோள்பட்டை, வலது காது, இடது பக்கம் கழுத்து ஆகிய இடங்களில் வெட்டினார். ஆஜர் எதிரி வீச்சரிவாளுடன் அங்கிருந்து சென்றுவிட்டார். எதிரி என் அண்ணனை வெட்ட பயன்படுத்திய வீச்சரிவாள்தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது. எதிரி என் அண்ணனை வீச்சரிவாளால் வெட்டியபொழுது நானும் கௌதமும் வெட்டாதீர்கள் என்று சொன்னோம். என் தாயார் பொன்னம்மாள், தங்கை ரேவதி, தாத்தா நாராயணன் ஆகியோர் சத்தம்கேட்டு ஓடி வந்தனர். என் அண்ணன் நிகழ்விடத்திலேயே இறந்துவிட்டார். என் அண்ணனின் பிரேதத்தை அங்கிருந்து அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றனர். 05.04.2017 ம் தேதி சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கின் முன் வைத்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை(எதிரி தரப்பில்)</u>:-

எதிரியின் வீடு எங்கள் வீட்டிலிருந்து 100 அடி தொலைவில் உள்ளது. எதிரியின் வீட்டிற்கு தெற்கில் எதிரிக்கு சொந்தமான 15 செண்ட் விவசாய நிலம், ரத்தினம் மற்றும் சின்னப்பையன் ஆகியோருக்கு விவசாய நிலம் உள்ளது. அதைத்தாண்டி எங்கள் விவசாய நிலமும் வீடும் உள்ளது. எதிரியின் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே 300 அடி தூரம் உள்ளது என்றும், நான் 100 அடி என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டிற்கு கிழக்குப்புறம் தகரத்தால் சாளை அமைத்துள்ளார்கள் என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு வடக்குப்புறமாக கணேசன் மற்றும் முருகேசன் ஆகியோரது வீடுகள் உள்ளன என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு கிழக்கே 30 அடி தொலைவில் தண்ணீர் தொட்டி மற்றும் கிணறு உள்ளன என்றால் சரிதான். என் அண்ணன் திருப்பதியும் எதிரியும் ஒன்றாக கொத்தனார் வேலைக்கு செல்வார்கள் என்றால் சரிதான். என் அண்ணி வசந்தாவின் தகப்பனார் சின்னபையனுக்கு காது கேட்காது,

வாய்பேசமுடியாது. ஆஜர் எதிரிதான் என் அண்ணனுக்கு திருமணம் செய்துவைத்தார் என்றால் சரியல்ல. என் அண்ணனுக்கு மது அருந்தும் பழக்கம், போதைப்பொருள் பயன்படுத்தும் பழக்கம் இருந்தது என்றால் மது அருந்துவார், பீடி குடிப்பார். போதைப்பொருள் பழக்கம் இல்லை. மது மற்றும் போதைப்பொருள் பழக்கம் என் அண்ணனுக்கு இருந்ததால்தான் என் அண்ணிக்கும் அண்ணனுக்கும் தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. கள்ளக்காதலால்தான் தகராறு ஏற்பட்டது. 02.04.2017 ம் தேதி என் அண்ணனையும் சமாதானப்படுத்தி, அழைத்துவந்து கறிவிருந்து வைத்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்தியூர் அய்யனாரப்பன் கோவிலுக்கு நாங்கள் குடும்பத்தோடு சென்று, சந்தோஷமாக சாமிகும்பிட்டுவிட்டு வந்தோம் என்றால் சாட்சி சந்தோஷமாக இல்லை என்றும், கள்ளக்காதல் பிரச்சனை இருந்தது என்றும் பதிலளிக்கிறார். என் அண்ணிக்கும் எதிரிக்கும் கள்ளக்காதல் இருந்ததாக ஊரில் பேசிக்கொண்டார்கள் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணிக்கும் எதிரிக்கும் கள்ளக்காதல் இருந்ததால் என் அண்ணி கோவித்துக்கொண்டு அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 04.04.2017 ம் தேதி மாலை எங்கள் வீட்டில் பலகாரம் செய்து எல்லோரும் இருந்தோம். பீடி வாங்குவதற்காக கடைக்குச் சென்ற என் அண்ணன் எதிரியின் வீட்டிற்கு முன்புறமாக சென்றால் என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு முன்புறம்தான் கடைக்குச் செல்லும் பாதை உள்ளது, மேற்படி பாதை எதிரிக்கு சொந்தமான நிலத்தில் உள்ளது. என் அண்ணன் திருப்பதி மாலை 6.45 மணியளவில் வீட்டிலிருந்து கடைக்குச் சென்றார். இரவு 7 மணிக்கு சத்தம் கேட்டுதான் நான் வீட்டிலிருந்து வெளியே சென்றேன். கௌதம் எனக்கு பின்பு வந்தார் என்றால் சரியல்ல, ஒன்றாக சென்றோம். எதிரியின் வீட்டிற்கு தெற்கு பக்கத்தில் மின்விளக்கு இருந்ததா என்று எனக்கு தெரியாது. தகராறு இரவு 7 முதல் 7.15 மணிக்குள் நடைபெற்றது. எதிரிக்கு உடம்பில் காயங்கள் எதுவும் இல்லை.

எதிரியின் தாயாரை நான் பார்க்கவே இல்லை. 04.04.2017 ம் தேதி இரவு 7 மணிக்கு நான் என் அண்ணன் திருப்பதி, கௌதம் ஆகியோர் எதிரியின் வீட்டிற்கு சென்று மின்விளக்கை அடித்து சேதப்படுத்தினோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபின்பு எங்கள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்தார்கள். தகராறு தண்ணீர் தொட்டிக்கு வடக்குபுறமாக நடந்தது. என் அண்ணன் நான் சென்று பார்த்தபொழுது தண்ணீர் தொட்டிக்கு வடக்குபுறமாக விழுந்து கிடந்தார். அதன்பின்பு என்தாயார் மற்றும் சகோதரி வந்தனர். முதல்விசாரணையில் சொன்னதுபோன்று எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 04.04.2017 ம் தேதி இரவு 7 மணிக்கு நான் சா.பொ.–1 வீச்சரிவாளுடனும், என் அண்ணன் திருப்பதி தொண்ணையுடனும் (Woodenlog) கௌதம் அரிவாள்மனையுடனும் எதிரியை கொலை செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் எதிரியின் வீட்டிற்கு சென்றோம் என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டு மின்விளக்கை சேதப்படுத்தினோம் என்றால் சரியல்ல. அன்றையதினம் நாங்கள் மூவரும் குடிபோதையில் இருந்தோம் என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து சாளையில் படுத்திருந்த எதிரியை என் அண்ணன் திருப்பதி தொண்ணையால் முகத்தில் அடித்தார் என்றும், நான் வீச்சரிவாளால் எதிரியை வெட்டி காயப்படுத்தினேன் என்றும், மேலும் கௌதம் எதிரியின் தாயார் சுமதியை அரிவாள்மனையால் வெட்டி காயப்படுத்தினார் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி தன்னையும் தன் தாயாரையும் காப்பாற்ற முற்பட்டபொழுது ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் என் அண்ணன் திருப்பதிக்கு காயங்கள் ஏற்பட்டன என்றால் சரியல்ல. எதிரியும் அவரது தாயாரும் தங்களை காப்பாற்றிக்கொள்ள சத்தம்போட்டதில் அருகில் உள்ளவர்கள் ஓடிவந்து தடுத்தபொழுது தண்ணீர்தொட்டிக்கு அருகில் வைத்து என் அண்ணனுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 5.04.2017 ம் தேதி போலீசார் என்னை விசாரித்தபொழுது என்னிடம் கையொப்பம் பெறவில்லை. எதிரிக்கும் அவர் தாயாருக்கும் காய்ங்கள் ஏற்படுத்தியது சம்பந்தமாக புகார் கொடுத்து, நிலுவையில் இருந்ததால் அங்கிருந்து நான் ஓடிவிட்டேன் என்றால் சரியல்ல. என்

அண்ணன் பிரேதத்துடன் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. என் அண்ணன் பீடி வாங்க சென்றதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தகராறு ஏற்பட்டுவிடுமோ என்று நாங்கள் என் அண்ணனை பின்தொடர்ந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 30 அடி தூரத்தில் என்அண்ணனை பின்தொடர்ந்து சென்றோம் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என் அண்ணனை வெட்டி காயப்படுத்தியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி வீச்சரிவாளுடன் ஓடிவிட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சா.பொ.–1 வீச்சரிவாள் எனக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவர் என் அண்ணன் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் என்மீது சான்று பட்டியல் வழக்கு எண். 2/2022 நிலுவையில் உள்ளது. அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
**அமர்வு வழக்கு எண்.** 205/2018

**அ.சா.–** 3

| | |
|---|---|
| பெயர் : திருமதி. ரேவதி | கிராமம் : |
| க/பெ. : திரு. தங்கதுரை | தொழில்: |
| வயது : | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 12th day of October, 2022.

**முதல்விசாரணை**:–

நான் சேலம் மாவட்டம், பூசாரிப்பட்டி, வைரன்காட்டில் குடியிருக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன திருப்பதி என் உடன்பிறந்த அண்ணன். ஆஜர் எதிரி என் சித்தப்பா மகன். அ.சா.–1 பொன்னம்மாள் என் தாயார். அ.சா.–2 கோவிந்தராஜ் என் அண்ணன். என் அண்ணன் மனைவி பெயர் வசந்தா. என் அண்ணனுக்கு 3 குழந்தைகள். ஒரு குழந்தை என் தாயாரிடம் உள்ளது. மீதி 2 குழந்தைகளுடன் என் அண்ணி எதிரியுடன் வாழ்ந்து வருகிறார். கடந்த 04.04.2017 ம் தேதி மாலை சுமார் 6.30 மணியளவில் என் அண்ணன் திருப்பதி என் தாயாரிடம் கடைக்குச் சென்று பீடி வாங்கிவிட்டு, தன் மாமனார் சின்னப்பையனையும் அழைத்து வருவதாக சொன்னதை நான் கேட்டேன். என் அண்ணன் கடைக்குச் சென்றபின்பு தொடர்ந்து அ.சா.–2 கோவிந்தராஜ் மற்றும் எனது முதல் கணவர் கௌதம் ஆகியோரும் சென்றனர். சிறிது நேரத்தில் என் அண்ணனும், அ.சா.–2 கோவிந்தராஜும் சத்தம் போடுவது கேட்டு, நான், என் தாயார் மற்றும் சிலரும் சத்தம்

வந்த இடத்திற்கு சென்று பார்த்தபொழுது என் அண்ணனுக்கு உச்சந்தலை, வலது கண், இடது பக்க தோள்பட்டை ஆகிய இடங்களில் இரத்தக்காயம் பட்டு கீழே விழுந்து கிடந்தார். நாங்கள் உடனே ஆம்புலன்ஸ் மூலம் என் அண்ணனை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நாங்களும் பின்தொடர்ந்து மருத்துவமனைக்கு சென்றோம். இரவு 9 மணியளவில் என் அண்ணன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். இது சம்பந்தமாக என் தாயார் புகார் கொடுத்தார். எதிரிக்கும் என் அண்ணன் மனைவிக்கும் கள்ளத்தொடர்பு இருந்ததால் தகராறு ஏற்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை(எதிரி தரப்பில்):-**

வழக்கு சம்பவ சமயத்தில் நான் சேலம் சூரமங்கலம், பழையூர் பஸ் ஸ்டாப் புதுரோட்டில் வசித்து வந்தேன். எங்கள் வீட்டிற்கு தெற்குபுறத்தில் எதிரியின் விவசாய நிலம் உள்ளது. என் அண்ணன் குடிபோதைக்கு அடிமையாகி அதிலிருந்து மீள்வதற்காக சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல. அவ்வாறு சிகிச்சைக்கு எதிரிதான் என் அண்ணனை மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு காரணம் என்று என் அண்ணனுக்கும் எதிரிக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரித்தபொழுது என் அண்ணி வாழ்ந்து வருவதாக சொல்லவில்லை என்றால் சரிதான். என் அண்ணி எதிரியுடன் வாழ்ந்து வருவதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணி தீவட்டிப்பட்டி காவல்நிலையத்திற்கு அருகில் தனியாக வீடு வாடகைக்கு எடுத்து வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. என் அண்ணன் பீடி வாங்கிவிட்டு, மாமனாரை அழைத்துவருவதாக என் தாயாரிடம் சொல்லிச் சென்றதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணனும் எதிரியும் ஒரே இடத்தில் கொத்தனார் வேலை செய்தார்களா என்று எனக்கு தெரியாது. என் அண்ணன் கடைக்குச் சென்று அரைமணி நேரம் கழித்து நானும் என் தாயரும் சத்தம் கேட்டு சென்றோம். நான் சென்றுபார்த்தபொழுது என் அண்ணன் தண்ணித்தொட்டிக்கு அருகில் விழுந்து

கிடந்தார். அந்த நேரத்தில் சுமார் 30 பேர் அந்த இடத்தில் கூடி இருப்பார்கள். 04.04.2017 ம் தேதி இரவு 7 மணிக்கு என் அண்ணன், அ.சா.2 கோவிந்தராஜ் மற்றும் கௌதம் ஆகியோர் தொண்ணை, வீச்சரிவாள், அரிவாள்மணை ஆகிய ஆயுதங்களுடன் எதிரியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து மின்விளக்கை சேதப்படுத்தி எதிரி மற்றும் எதிரியின் தாயாரை தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், அப்பொழுது எதிரி தன்னையும் தன் தாயாரையும் காப்பாற்றவேண்டி ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் என் அண்ணனுக்கு காயம் ஏற்பட்டது என்றும், அந்த இடத்தில் கூடிய பொது மக்கள் தடுக்க முற்பட்டபொழுது ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் என் அண்ணனுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் என் அண்ணனிக்கும் கள்ளத்தொடர்பு இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோனது என் அண்ணன் என்பதால் நாங்கள் செய்த அராஜகத்தை மறைப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுமுதல்விசாரணை – இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.